## சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க கூட்டம்!

### மாவட்ட செயலாளர்-அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



**நாள் : 24.05.2023 – நேரம் 6 மணி**

| பேச்சாளர் | இடம் | கூட்ட ஏற்பாடு |
|---|---|---|
| கரூர். முரளி | ஜம்புலிங்கம் மெயின் ரோடு ஜி.கே.எம். காலனி, சென்னை - 82. (20வது தெரு அருகில்) | சு.சசிகுமார் பகுதி துணை அமைப்பாளர் கொளத்தூர் மேற்கு |
| சபாபதி மோகன் | அம்பத்தூர் ஓ.டி. பேருந்து நிலையம் அருகில் | இரவை. பிரபு பகுதி அமைப்பாளர் அம்பத்தூர் வடக்கு |
| பொள்ளாச்சி சித்திக் | அண்ணா சிலை டி.வி. நகர் திருமங்கலம் | ஜி.ஜெ.பாபு பகுதி அமைப்பாளர் வில்லிவாக்கம் மேற்கு |
| புதுக்கோட்டை விஜயா | திரு.வி.க. நகர் மெயின் ரோடு, புளியந்தோப்பு, சென்னை - 12 (ஆட்டுத் தொட்டி பின்புறம்) | செ.மணிமாறன் பகுதி அமைப்பாளர் திரு.வி.நகர் வடக்கு |

**நாள் : 25.05.2023 – நேரம் 6 மணி**

| பேச்சாளர் | இடம் | கூட்ட ஏற்பாடு |
|---|---|---|
| சபாபதி மோகன் | ஜில்ஸ் ரோடு மண்ணடி சென்னை - 1 | டி.பிலிப்ஸ், பகுதி துணை அமைப்பாளர் துறைமுகம் கிழக்கு |
| கோவி. செழியன் | அம்பத்தூர் எஸ்டேட் பேருந்து நிலையம் | ஜெ.பி.ஆர். ரகு, பகுதி துணை அமைப்பாளர் அம்பத்தூர் கிழக்கு |
| தமிழன் பிரசன்னா | சிவராஜபுரம் பிரதான சாலை புளியந்தோப்பு, சென்னை - 12 | ஜெபா (எ) அஜித் குமார் பகுதி துணை அமைப்பாளர் எழும்பூர் வடக்கு |
| கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் | குட்டியப்பன் தெரு, சந்திப்பு (மேடவாக்கம் டேங்க் ரோடு) | மா.ஜெகதீஸ்வரன், பகுதி அமைப்பாளர் வில்லிவாக்கம் கிழக்கு |

**நாள் : 26.05.2023 – நேரம் 6 மணி**

| பேச்சாளர் | இடம் | கூட்ட ஏற்பாடு |
|---|---|---|
| தமிழன் பிரசன்னா | திரு.வி.க.நகர் பேருந்து நிலையம் கொளத்தூர் | எஸ்.தனசேகர் பகுதி அமைப்பாளர் கொளத்தூர் கிழக்கு |
| ஈரோடு இறைவன் | வரதாமூர்த்தி அப்பன் தெரு, அண்ணா பிள்ளை சந்திப்பு | என்.மோகன் பகுதி துணை அமைப்பாளர் துறைமுகம் மேற்கு |
| கோவி.செழியன் எம்.எல்.ஏ. | சின்னபாபு தெரு நம்மாழ்வார்பேட்டை (ஐந்து விளக்கு அருகில்) | பா.பி.தாஸ் பகுதி அமைப்பாளர் திரு.வி.க.நகர் தெற்கு |
| கரூர்.முரளி | அசாட் காலனி கார்னர், அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம் | எம்.வசந்தகுமார் பகுதி அமைப்பாளர் அம்பத்தூர் தெற்கு |
| பொள்ளாச்சி. சித்திக் | அம்பேத்கர் திடல் சேத்துப்பட்டு | சே.பாலாஜி பகுதி அமைப்பாளர் எழும்பூர் தெற்கு |

எனவே மேற்குறிப்பிட்டுள்ள கூட்டங்களுக்கு அந்தந்த பகுதியை சேர்ந்த மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாகமுகவர்கள், கழக செயல்வீரர்கள் அனைவரும் இக்கூட்டத்தில்கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

டி.ஆர்.பாலு எம்.பி.-அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு !

# மதுரவாயல் தெற்கு பகுதி இளைஞரணி சார்பில் சாதனை விளக்க தெருமுனை கூட்டங்கள்!

## தோழர் உமா - தாயகம் கவி எம்.எல்.ஏ-யாழினி சிறப்புரை !

சென்னை மே:20

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி இளைஞரணி தி.மு.க சார்பில் தமிழக முதல்வர் அவர்களின் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டங்கள் மதுரவாயல் தெற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளரும்,151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச.சங்கர்கணேஷ் தலைமையில்,வட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ப.தனசேகரன்,ஆர். வினோத்குமார் என்.விவேக்,எம்.கிரி (எ) கிரிதரன்,மா.ஜெகன் எம். மூர்த்தி ஆகியோரின் வரவேற்புரையில்,பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இரா.பா.உதயகுமார், டி.ராஜேஷ்,செ.ரவி, மு. மகேஷ் குமார், ஆர். தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

கூட்டங்கள் நடைபெறும் தேதிசிறப்புரையாற்றுவோர் விவரங்கள் வருமாறு;

இன்று 20.5.2023, சனிக்கிழமை,நேரம்: மாலை 5.00 மணி,

இடம்: 153 வது வட்டம், போரூர். சிறப்புரையாற்றுபவர் தோழர் திருமதி உமா (கொள்கைப் பரப்புச் செயலாளர் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை)

நிகழ்ச்சி ஏற்பாடு: இரா. பா. உதயகுமார் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்.

நாள்: 21.05.2023, ஞாயிற்றுக்கிழமை, நேரம்: மாலை 5.00 மணி,

இடம்: 151வது வட்டம், பூத்தப்பேடு பிரதான சாலை.சிறப்புரை ஆற்றுபவர் தாயகம் கவி

(திரு.வி.க நகர் சட்ட மன்ற உறுப்பினர்)

நிகழ்ச்சி ஏற்பாடு: ச. சங்கர் கணேஷ் எம்.சி. மதுரவாயல் தெற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர்.

நாள்: 24.5.2023, புதன்கிழமை,நேரம்: மாலை 5.00 மணி,

இடம்: 148வது வட்டம் மேட்டுக்குப்பம் நெடுஞ் சாலை, மேட்டுக்குப்பம். திருமதி யாழினி (தலைமை கழக பேச்சாளர்,சமூக வலைத்தள பொறுப்பாளர்) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடு:ஆர். தியாகராஜன் மதுரவாயல் தெற்கு பகுதி இளைஞரணி.

இந்நிகழ்வில் கழக பொருளாளர், நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலு எம்.பி,மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர்,மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன்,

மதுரவாயல் பகுதி கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி விருகை சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளருமான ஏ.எம். வி.பிரபாகரராஜா,மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளரும், மண்டல குழு தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் உள்ளிட்ட மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள்பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

153வது வட்ட இளைஞரணி பி.கே.ஆர்.மஞ்சித்ரவி, 151வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.பிரேம்குமார், 148வது வட்ட இளைஞரணி ஜெ. அஸ்வத் ஜெகதீசன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

# தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.முக. செயற்குழுக் கூட்டம், வருகிற 23.05.2023 செவ்வாய்கிழமை காலை 9.00 மணியளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு, அவர்கள் தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் க.செல்வம் எம்.பி. டி.வி.கோகுலகண்ணன், கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

சட்டமன்ற தொகுதி பூத்கமிட்டி தலைமை கழக பார்வையாளர்கள் டாக்டர் சுபேர்கான் (காஞ்சிபுரம்) ஜெ.பச்சையப்பன், (உத்திரமேரூர்) கனான்ஸ்டன்டைன் ரவீந்திரன், (மதுராந்தகம்) கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், (செய்யூர்) சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துக்கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

எனவே, இக்கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர் தலைமைசெயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் செயலாளர்கள், மாநில, மாவட்ட, கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, கழக ஆக்கபணிகள்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

---

113 வது வார்டு மக்களின் கோரிக்கையை ஏற்று

# பூங்கா விளக்குகள்அடிப்படை வசதிகள்

## பிரேமா சுரேஸ் எம்.சி.செய்து கொடுத்தார்

சென்னை, மே, 20

ஆயிரம் விளக்கு 113 வது வார்டில் வள்ளுவர் கோட்டம் அருகில் உள்ள அம்மா உணவகத்தில் உணவருந்துபவர்களின் குறைகளை மாமன்ற உறுப்பினர் பிரேமா சுரேஸ் கேட்டறிந்து தேவையான அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வைத்தார். அதே போன்று அங்குள்ள சென்னை பள்ளியில் உடைந்த ஜன்னல் கதவு, தரைத்தளம், பழுதடைந்த மின்சார கம்பிகளை சீர்படுத்தி புதிய மின் இணைப்பை ஏற்படுத்தி அப் பள்ளியை தூய்மைப் படுத்தியதோடு, மாணவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்தார்.

இதே போன்று 113 வது வார்டில் உள்ள நான்கு பூங்காக்களில் நடைபயிற்சி சென்ற பொதுமக்களிடம் மாமன்ற உறுப்பினர் பிரேமா சுரேஸ் குறைகளை கேட்டறிந்தார். அப்போது அப் பகுதி மக்கள் பூங்காக்களில் விளக்குகள் போதிய அளவில் இல்லாததால், இருளடைந்து காணப்படுகிறது என்றும் பூங்காக்களில் குழந்தைகள் விளையாட விளையாட்டு உபகரணங்கள் இல்லை என்றும் தங்களின் குறைகளை நிவர்த்தி செய்திட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து வள்ளுவர் கோட்டம் எதிரில் உள்ள பூங்காவில் 15 விளக்குகளும்,பெரியார் சாலையில் உள்ள பூங்காவில் 15 விளக்குகளும், அபிபுல்லா சாலையில் உள்ள சர்மா பூங்காவில் 14 விளக்குகளும், சாரி தெருவில் உள்ள பூங்காவில் 15 விளக்குகளும் என்று மொத்தம் 59 விளக்குகளை உடனடியாக அமைத்துக் கொடுத்து சிறுவர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களையும் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து அமைத்து கொடுத்தார். அப்போது தங்களின் கோரிக்கையை உடனடியாக கேட்டறிந்து நிவர்த்தி செய்ததற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசுக்கும், சென்னை மாநகராட்சிக்கும், மாமன்ற உறுப்பினர் பிரேமா சுரேஸ்க்கும் அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

---



சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்கு பகுதி, வடசென்னை நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 35 வது வட்டம், முத்தமிழ் நகர், 4 வது பிளாக், 52 வது தெரு மற்றும் கண்ணதாசன் நகர், 2 வது பிளாக், 3 வது தெரு ஆகிய இரண்டு இடங்களில் ரூபாய் 67 லட்சம் மதிப்பில் புதிய அங்கன்வாடி கட்டிடங்களை வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி விராசாமி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.இளைய அருணா எம்.சி, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், 4 வது மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யூ.கணேசன் எம்.சி, பெரம்பூர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் முருகன், வட்டக் கழகச் செயலாளர்கள் எம்.உமாபதி, இரா.அரிதாஸ், மாமன்ற உறுப்பினர் ஜீவன் எம்.சி, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

---

ஆர்.சாரதி தலைமை! படப்பை ஆ.மனோகரன் - பட்டூர் ஜபருல்லா பங்கேற்பு!

# மாங்காடு நகர இளைஞர் அணி சார்பில் அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் - நலஉதவிகள்!

## டி.ஆர்.பாலு எம்.பி - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - நாகம்மை கருப்பையா சிறப்புரை!

காஞ்சிபுரம், மே 20 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மாங்காடு நகர தி.மு.க. இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் மற்றும் நலிந்தோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (20.5.2023 சனிக்கிழமை) மாலை 5.30 மணிக்கு, பத்ரிமேடு, 2 வது தெரு, மாங்காடு எனும் முகவரியில் நடை பெறுகிறது.

ஆர்.சாரதி தலைமை வகிக்கிறார்.

ஜெ.கனகராஜ் வரவேற்புரை ஆற்றுகிறார்.

டி.ராஜேந்திரன், ஜி.முனுசாமி, டி.வாசுதேவன், என்.ஜியாவுதீன், சேரன் கதிர், எஸ்.ஜீவா, என்.ரமேஷ், எம்.வல்லரசு, பி.கௌதம், எஸ்.அக்ரம், ஒய்.நவீன், பி.ஆர்.விக்னேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாகம்மை கருப்பையா, மாவட்ட ஊராட்சித் தலைவர், ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், நகரமன்ற துணை தலைவர், நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் எம்.கே.டி.கார்த்திக், எல்.பிரபு, எம்.ஆர். சீனிவாசன், ஜி.ராமு, ஜா. செந்தில் தேவராஜ், கோல்டு டி.பிரகாஷ், கே.ஜாகீர்உசேன், வீ.விஜயகுமார், கே.பாக்கியராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கே.சந்தீப், ஆர்.சக்தி, வி.ஜெபபோஸ், எஸ். ராஜேஷ், டி.கிளின்டன் ஆகியோர் நன்றி கூறு கின்றனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தேசமுத்துக்குமார்

**மே 20 (2021)**



இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதி பிரதிநிதியாகவும், வட்ட துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---





---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.எம். பார்த்தசாரதி

**மே 20 (1984)**



கழக வரலாற்று நூல் ஆசிரியர். தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பேரன்பிற்குரியவர்.

கழகம் தோன்றியபோது, நமது கொள்கைகளை எடுத்துக்கூற "மாலைமணி" எனும் நாளேடு கண்டவர்.

"பெரியார் அவர்களின் பகுத்தறிவு சூறாவளி பிரச்சாரப் படைத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர், எமை நத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்! என்ற வைராக்கிய உள்ளம் படைத்தவர், களம் பலகண்டவர், பலமுறை சிறை சென்ற தியாக சீலராக விளங்கியவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**